# வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்

# தொழில் வாய்ப்பு

வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனமானது 650,000க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் மற்றும் 1500 ஊழியர்களின் தொழிற்படை ஒன்றுடன் நீர்கொழும்பில் இருந்து காலி வரை நாட்டின் கரையோரப் பகுதிகளை உள்ளடக்கிய ஏழு கிளைகளைக் கொண்ட இலங்கையில் உள்ள விநியோக பயன்பாட்டு (Distribution Utility) நிறுவனம் ஒன்று என்பதோடு ADB நிதியின் கீழ் வலுசக்தி கட்டமைப்பை வலுப்படுத்தல் மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி ஒருங்கிணைப்பு திட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு பின்வரும் பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் தகுதியுடையவர்களை தேடுகிறது.

மின்சார பயன்பாட்டு CAD மற்றும் மாதிரியாக்க அதிகாரி

| | |
|---|---|
| கல்வித தகைமைகள் | க.பொ.த. (சா./த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது குறைந்தது ஐந்து (05) திறமைச் சித்திகளுடன் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம் மற்றும் ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்<br><br>மற்றும்<br><br>க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்கள். |
| தொழில்முறை/தொழில்நுட்ப தகைமைகள் | மின் வரைதல், மின் பொறியியல் அல்லது அதற்கு இணையான அங்கீகரிக்கப்பட்ட தகைமையில் தொழில்நுட்பத்தில் NVQ தரம் 05 அல்லது தேசிய சான்றிதழ் |
| அனுபவம் | மின் பயன்பாடு அல்லது வலுசக்தி துறைக்காக CAD வரைவு மற்றும் மாதிரியாக்கத்தில் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம் விநியோக வலைப்பின்னல் அல்லது மின் துணை நிலையங்களில் தொடர்புபட்டிருப்பது விரும்பத்தக்கது. |
| தொழில்நுட்ப திறன்கள் | Auto CAD இல் திறமையும், Free CAD மற்றும்/அல்லது Solid Works பற்றிய செயற்பாட்டு அறிவும் மின்பயன்பாட்டு வரைபடத் தரநிலைகள் மற்றும் வரைபடத் திருத்தக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் குறித்த பரிச்சயமும் பொறியியலாளர்களின் அறிவுறுத்தல்களின்படி பணிகளை மேற்கொள்ளும் திறனும் இருத்தல் வேண்டும். |
| வயது | 2026 ஒகஸ்ட் 03 ஆம் திகதிக்கு 40 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல். |

**பொது நிபந்தனைகள்:**

தேர்வு செய்யப்படும் அபேட்சகர் 01 ஆண்டு ஒப்பந்தக் காலம் ஒன்றுக்காக நியமிக்கப்படுவதோடு நேர்முகப்பரீட்சை மற்றும்/ அல்லது CAD திறன்களின் நடைமுறை மதிப்பீடும் ஒன்றின் அடிப்படையில் தேர்வு இடம்பெறும்.

தேர்வு செய்யப்படும் தனிநபர்களின் தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட அபேட்சர்களுக்கு போட்டித் தன்மை வாய்ந்த மற்றும் விரிவான ஊதியப் பொதி ஒன்று வழங்கப்படும்.

லங்கா மின்சார நிறுவனம், அனைவரும் மரியாதையுடன் நடத்தப்படுவதையும், அனைவருக்கும் உள்ளடக்கிய பணிச்சூழலில் சமமான வேலைவாய்ப்புகள் வழங்கப்படுவதையும் உறுதிப்படுத்த உறுதிபூண்டுள்ளது. இனம், இனப் பின்னணி, மதம், கலாசாரப் பின்னணி, பாலினம், பாலியல் நோக்குநிலை அல்லது மாற்றுத்திறன்கள் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், தகுதியுடைய அனைத்து விண்ணப்பதாரர்களும் விண்ணப்பிக்குமாறு LECO ஊக்குவிக்கிறது.

உறவினர் அல்லாத இரு நடுவர்களின் பெயர், முகவரி மற்றும் தொடர்பு இலக்கத்துடன் சேர்த்து சான்றிதழ்களின் பிரதிகளுடன் உங்களது விரிவான சுயவிபரக் கோவையை 2026 ஒகஸ்ட் 03 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ் கையொப்பமிட்டு கிடைப்பதற்கு அனுப்பவும்.

விண்ணப்பிக்கும் பதவியை உங்களது சுயவிபரக் கோவையில் மற்றும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

**மேலதிக பொது முகாமையாளர்**
**மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்**
**வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்**
**1ஆவது மாடி, ஈ.எச். குரே கட்டிடம்,**
**411, காலி வீதி, கொழும்பு -03.**